1980 ஆகஸ்ட் 5]

குறிப்பு இப்போது என்னிடத்திலே இல்லை ஆனால் அது உபயோகப்படுத்தப் படுகிறது, அதற்கு கிராக்கி இருக்கிறது என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது. ஆனால் கறியைப் பற்றிய ஆராய்ச்சியில் நாங்கள் இன்னும் இறங்கவில்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவர் அவர்களே, 3 ஆண்டுகள் வளர்ச்சி பெற்ற முதலைக் குட்டிகளை நீர்த் தேக்கத்திலே விடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறபோது கிராமங்களிலே பெரும் பீதி ஏற்படுகிறது. கண்மாயிலே முதலை வந்து விட்டது என்று பயப்படுகிறார்கள். அதேமாதிரி நீர்த்தேக்கங்களிலிருந்து ஒரு முதலை தப்பி வந்து விட்டதாக செய்தியெல்லாம்கூட வந்தது. அப்படி தப்பி வந்துவிடாமல் இருக்கக்கூடிய முறையிலே அதைத் தடுக்க நடவடிக்கைகள் என்ன என்ன எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நீரிலேயிருந்து முதலை வெளியே வந்துவிட்டால், தரைக்கு வந்து விட்டாலே தன் சக்தியை இழந்து விடுகிறது. ஆகவே அதிலே ஆபத்தில்லை. நீரிலே இருக்கிற போது தான் அதற்கு அதன் சக்தி இருக்கும். நீரிலே முதலைகளால் மாத்திரமல்ல, எத்தனையோ விடமான ஆபத்துக்கள் இருக்கின்றன ஆகவே இதனாலே ஆபத்துக்கள் இராது.

ஏலகிரி மலைப்பகுதியில் சுற்றுலா விடுதி.

*.வினா எண் 101 **திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏலகிரி மலையில் சுற்றுலா வாரியத்தின் மூலம் ஒரு புதிய உணவு விடுதி ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ):—சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஏலகிரி மலையில் ரூ. 1.00 இலட்சம் செலவில் ஒவ்வொன்றிலும் இரண்டு அறைகளுடன் கூடிய இரு குடில்கள் கட்டப்பட்டுள்ளன. இவைகள், பராமரிப்பதற்காக வனத்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், இக்குடில்களில் வசதிகளை செய்யும்பொருட்டு 1980-81-ல் ரூ. 1.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு சுற்றுலா வாரியத்தின் மூலம் உணவு விடுதி ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

[1980 ஆகஸ்ட் 5

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, ஏலகிரி மலையில் நிறைய பயணிகள் வந்து தங்குகிறார்கள். அங்கே வந்து தங்குகிறவர்களுக்கு உணவு விடுதி வசதியாக இல்லை. ஆகவே அங்கே உணவு விடுதியை நடத்த அரசாங்கமே முன்வருமா ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஏலகிரி மலை என்பது வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற ஒரு நல்ல முக்கியமான மலை வாசஸ்தலம். அது ஏழைகளின் உதகமண்டலம் என்ற சிறப்புப் பெயரைக்கூடப் பெற்றிருக்கிறது. அங்கே உணவு விடுதி நடத்துவதற்காக வியாபார ரீதியிலே தனிப்பட்டவர்கள் முன்வந்தால் அதற்குத் தேவையான உதவிகளை சுற்றுலாத் துறையோ அல்லது அரசோ முயற்சிகளை இயன்ற வரையில் செய்வது பற்றி முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூமாபட்டி தாய்-சேய் நலவிடுதி கட்டிடம்.

*வினா எண் 102 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டம், வத்திராயிருப்பு ஒன்றியம் கூமாபட்டி கிராமத்தில் தாய்-சேய் நலவிடுதி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு சுமார் நான்கு ஆண்டுகள் ஆகியும் செயல்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை. அந்தக் கட்டிடத்தில்தான் தாய்சேய் நல நிலையம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துகிற அளவுக்கு அதிகாரிகள் தவறான தகவல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்திருப்பது எனக்கு மன வேதனையைத் தருகிறது அது

* * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விடுதி நடக்கிறதா இல்லையா என்று கேளுங்கள்.